# ஆகஸ்ட் 25 - புனித லூயிஸ் (1215 – 1270)

இவருடைய தந்தையின் பெயர் 8-வது லூயிஸ் மன்னர். தாயின் பெயர் ப்ளாஞ்ச். தமிழில் வெள்ளையம்மாள். இவள் காஸ்தில் நாட்டின் 8வது அல்போன்ஸ் மன்னரின் மகள்.

நம் புனிதர் 12-ஆம் வயதில் தந்தையை இழந்தார். தாய் நாட்டை ஆண்டு வந்தாள். அவளே இவருக்கு உத்தம கிறிஸ்தவ பயிற்சி அளித்தாள். தன் மகன் பட்சமுள்ள, பக்தியுள்ள, நீதியுள்ள அரசனாக வேண்டுமென்று அவள் ஆசித்தாள். அவள் தன் மகனை நோக்கி, “மகனே, பாவமே உலகத்தில் மிகப்பெரும் தீமை என்பதை ஒரு போதும் மறவாதேளூ நான் உன்னை நேசிப்பது போல எந்தத் தாயும் தன் மகனை நேசித்ததில்லை. என்றாலும் நீ ஒரு சாவான பாவம் செய்து கடவுளை மனநோகச் செய்வதை விட சாவதைப் பார்க்க ஆசிப்பேன்” என்று அடிக்கடி கூறுவாள்.

லூயிஸ் அரசர் ஒவ்வொரு நாளும் காலையில் திருப்பலி காண்பார். அதன் பின்னரே வேறு வேலைகளைச் செய்வார். இவர் தம் பிறந்த நாளைக் கொண்டாட மாட்டார். ஞானஸ்நானம் பெற்ற நாளையே சிறப்பிப்பார். “புவாசி அரசர்” என கையெழுத்திடுவார். இவர் பல நல்ல பழக்கங்களை தொடங்கியிருக்கின்றனர். திருப்பலி நேரத்தில் விசுவாசப் பிரமாணம் சொல்லும் பொழுது ‘மனிதன் ஆனார்’ என்ற சொற்களின் போது முழந்தாளிட்டு வணங்கத் தொடங்கியவர் இவரே. ஆண்டவரது பாடுகளின் வரலாற்றை வாசிக்கும் பொழுது ‘அவர் உயிர் விட்டார்’ என்ற சொற்களின் போது முழளந்தாளிடும் வழக்கத்தை இவரே தொடங்கி வைத்தார். இவர் தமது சுகவசதிகளை பொருட்படுத்துபவர் அல்ல. ஏழைகளிடமும் நிர்ப்பாக்கியரிடமும் மிகுந்த அனுதாபம் காட்டுவார். மருத்துவமனைகளைக் கட்டினார். குருடர்களுக்கு விடுதி அமைத்தார். அதில் 300 குருடர்கள் இருந்தார்கள். தவறிய பின் திருந்திய பெண்களுக்கு பாதுகாப்பு இடம் கொடுத்தார். ஒவ்வொரு நாளும் 100 ஏழைகளுக்கு உணவு கொடுத்தார். தொழுநோயாளிகளுக்கு சேவை செய்தார். வழக்குகளை விசாரித்து நீதி வழங்குவார். அவரது இல்லத்தில் யாரும் கெட்ட வார்த்தை பேசக் கூடாது. ஆண்டவர் வாழ்ந்த பூமியை மீட்பதற்காக இவர் பாலஸ்தீனா சென்றார். நடந்த போரில் இவர் மகமதியர் கையில் அகப்பட்டு, பின் விடுதலை அடைந்து நாடு திரும்பினார். திரும்பவும் பாலஸ்தீனா சென்றார். வழியில் அவருக்கு நோய் வந்தது. இறுதி திருஅருட் சாதனங்களைப் பெற்று இறந்தார்.




**சிந்தனை:** சாவான பாவம் செய்வதை விட எல்லா வித வேதனைகளையும் அனுபவிக்க எப்பொழுதும் தயராக இரு.

**செபம்:** ஆண்டவரே, சாவான பாவமே உலகில் மிகப்பெருந் தீமையென அறியும் வரம் தாரும்.